**தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு**
(பதிவு எண். 158/CPT - அங்கீகாரம் பெற்றது - இணைப்பு: CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

CITU

27, மருதி தெரு,
சேப்பாக்கம்
சென்னை - 600 005.
போன் : 2854 8529
2851 5038
பேக்ஸ் : 2851 6574

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **கே. விஜயன்** | **எஸ்.எஸ். சுப்பிரமணியன்** | **டி. கோவிந்தராஜு** |

பெறுநர்,

**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்,
144, அண்ணா சாலை,
சென்னை - 600 002.

அய்யா,

பொருள் : **பணியமைப்பு - கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் தானே புயல் நிவரண பணிகளில் ஈடுபட்டவர்களுக்கு ஊக்க ஊதியம் வழங்கியதில் திருத்தம் கோருவது - சம்மந்தமாக...**

பார்வை 1 : **குறிப்பாணை மெமோ எண்.பர் 3741/எ3/எ232/2012 நாள் 13.01.2012.**

பார்வை 2 : **மெமோ எண் பர் 3741/எ3/எ232/2012 நாள் 21.01.2012.**

29.12.2011 அன்று வீசிய தானே புயல் கடலூர், விழுப்புரம் மாவட்ட மக்களின் அன்றாட வாழ்க்கையை நிலை குலையச் செய்தது.

தானே புயலின் பாதிப்பு மின்வாரிய கட்டடைப்பை அடியோடு அழித்தது. இரண்டு மாவட்டங்களிலும் கட்டமைப்பு சீர் குலைந்ததால் மின் இணைப்பே வழங்க முடியாத நிலை ஏற்பட்டது. இந்த பாதிப்புகளை சரி செய்ய ஆயிரக்கணக்கான மின்வாரிய தொழிலாளிகள், பொறியாளர்கள், அதிகாரிகள், அலுவலர்கள் உட்பட அப்பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

நிவாரப்பணியில் ஈடுபட்ட மின்வாரிய ஊழியர்கள் இரவு பகல் பார்க்காமல் ஊண் உறக்கமின்றி போர்க்கால அடிப்படையில் அப்பணிகளில் ஈடுபட்டு புயல் பாதிக்கப்பட் அடிச்சுவடே இல்லாத நிலையில் முழுவதுமாக புணரமைக்கப்பட்டு உள்ளது.

மின்வாரியமும் இப்பணியில் ஈடுபட்ட ஊழியர்களுக்கு பார்வையில் கண்ட வாரிய உத்தரவின் அடிப்படையில் மஸ்தூர்களுக்கு இரட்டிப்பு ஊதியமும், தினக்கூலி தொழிலாளிகளுக்கு மும்மடங்கு ஊதியமும் 20.01.2012 முதல் 05.02.2012 வரை வழங்கி உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

தானே புயல் 29.12.2011 இல் வீசி கோரத் தாண்டவம் ஆடிய மறுநாளான 30.12.2011 முதலே அம்மாவட்டத்தைச் சார்ந்தவர்களும், இதர மாவட்டத்தைச் சார்ந்த மஸ்தூர்கள், தினக்கூலி தொழிலாளிகள் மற்றும் இதர மின்வாரிய ஊழியர்கள் ஈடுபட்டு 10.02.2012 வரை நிவாரணப்பணி தொடர்ந்தது. அப்பணியில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டுவந்து ஊக்க ஊதியத்தை 20.01.2012 முதல் 05.02.2012 வரை வழங்குவது என்று வெளியிட்ட உத்தரவை மாற்றி 30.12.2011 முதல் 10.02.2012 வரை இரட்டிப்பு ஊதியமும், மும்மடங்கு ஊதியமும் வழங்கிடும் வகையில் தாங்கள் ஏற்கனவே பிறப்பித்த உத்தரவை மாற்றம் செய்ய வேணுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

எனவே தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், மின்வாரியம் அவர்கள் இக்கடிதத்தின் மீது அவசர நடவடிக்கை எடுத்து தானே புயல் நிவாரண பணியில் ஈடுபட்ட ஊழியர்களுக்கு 30.12.2011 முதல் 10.02.2012 வரை ஊக்க ஊதியமான இரட்டிப்பு ஊதியமும், மும்மடங்கு ஊதியமும் வழங்கிட உத்தரவு வழங்கிட வேணுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

தங்களின் நம்பிக்கையுள்ள,

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச்செயலாளர்.

நகல் :- கிளை செயலாளர்/மத்திய அமைப்பு கிளைகள்